


மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
நாமக்கல் மாவட்டம்
பொத்தனூர் பேரூராட்சி

நாமக்கல் மாவட்டம், பரமத்திவேலூர் வட்டம், பொத்தனூர் பேரூராட்சி மற்றும் கிராமம், சர்வே.எண் - 31/4A1 -ல் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம். (திட்டமில்லாத பகுதி)

கோப்பு எண்	:	NKL / ZV6SBNCJ / 46861 / 2025
இணையதள விண்ணப்பம் எண்	:	ZV6SBNCJ
அளவு	:	1:400 (அ) 1:33'0"

குறிப்பு

மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு..... : 0.90 ஏக்கர் (அ) 3641.00 சதுரமீட்டர்
கோரிய மனைகள்..... : 23
ஒதுக்கிய மனைகள்..... : 22
மனைப்பிரிவு எல்லை.....
நிலையில் உள்ள சாலை.....

அரசாணை எண் -18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 04-02-2019-ன் படி பூங்காவிற்கான தொகை அரசு வழிகாட்டி மதிப்பின்படி மனுதாரரால் தொகை செலுத்தப்பட்டுள்ளது.

பொது ஒதுக்கீடுகள் :

உள்ளாட்சிக்கு மனுதாரர் தானமாக ஒப்படைக்கப்பட்டவை -

1. மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு : 854.41 சமீ .....
2. பொது உபயோகம் : 40.44 சமீ (1.45%)

TANGEDCO -விற்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை :-

TANGEDCO : 40.82 சமீ (1.46%)

மூலை முடக்கு

7.2மீ முதல் 12.0 மீ அகல சாலை வரைக்கும் 1.5மீ X 1.5மீ மூலை முடக்கு விடப்பட வேண்டும்.

நிபந்தனைகள்:

1. அரசாணை எண் -18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA-1) நாள் 04-02-2019-ன்படி மனைப்பிரிவில் அமையும் சாலை, பொது உபயோகம் மற்றும் பூங்கா ஒதுக்கீடுகளை உள்ளாட்சி தானமாக பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
2. இம் மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும், எந்தத் துறைக்காகவும் நில ஆர்ஜிதப் பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும், உள்ளாட்சி உறுதி செய்ய வேண்டும்.
3. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் மனைப்பிரிவுக்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதில் ஏதேனும் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர்/ஆணையர் அவர்களால் இரத்து செய்யப்படும்.
4. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடங்களையும் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
5. நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்தாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி-திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்தாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் கிராமப்பதநிரம், குத்தகை பத்திரம், பட்டா, தாளப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல விண்ணப்தார் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதல்கட்டமாக விண்ணப்தாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமம் உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.
6. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைப்படத்தினை எவ்வித மாற்றமும் விடுவிலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6' X 4' அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரகரிக்கப்படவேண்டும்.
7. உத்தேச மனைப்பிரிவு இடத்தில் நீதிமன்ற வழக்குகள் ஏதேனும் நிலுவையில் இருப்பின் இம்மனைப்பிரிவுவின் அனுமதி லெல்லதக்கதல்ல.
8. உத்தேச மனைப்பிரிவின் ஊடே HT Line , LT Line ஆகியன செல்லுமாயின் அவைகள் சாலையின் போக்கிற்கு ஏற்றவாறு மாற்றியமைக்கப்பட வேண்டும்.
9. உத்தேச மனைப்பிரிவின் ஊடே நீர் நிலைகள் அமையுமாயின் அதற்கு பாதிப்பு ஏற்படாதவாறு கட்டிடங்கள் கட்டப்பட வேண்டும்.
10. The Tamil Nadu Government in G.O.Ms.No: 112, housing and Urban Development Department dated: 22.6.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016. The promoter has to advertise, market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority
11. அரசாணை எண்-181, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சியுடி.4(1)) துறை, நாள்: 09.12.2020- ன் நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களின் கற்றறிக்கை ந.க.எண் - 19799/2020/போநாள் 24.12.2020 படி சாலைகள், பொது ஒதுக்கீடு, TANGEDCO பங்கு பரப்பு ஆகியவை வரைபடத்தில்படி அமைக்கப்பட்டுள்ளதை உள்ளாட்சி அமைப்பு உறுதி செய்துக்கொள்ள வேண்டும்.
12. உத்தேச மனைப்பிரிவு இடத்தில் கட்டிடம் கட்டும் போது உரிய விதிகளை பின்பற்றி உரிய அனுமதி பெற்று கட்டப்பட வேண்டும்.
13. உத்தேச மனைப்பிரிவில் எந்தவித மாற்றம் செய்வதாக இருந்தாலும் இத்துறையின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.
14. உத்தரவு கூடத்தில் குறிப்பிட்டுள்ள சிறப்பு நிபந்தனைகள் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள் தவறாது கடைபிடிக்கப்பட வேண்டும்.

APPROVAL No. : SWP / DTCP / NAMAKKAL/ LAYOUT No. : 208 / 2025

Signature valid
தேவேஸ்வரி
Assistant Director
Location: Namakkal
Date: 29.12.19 [illegible]

Signature valid
Signed by: Executive Officer
Location: Namakkal
Date: 29.12.19 [illegible]

செ. சந்தியா
வரைவாளர் நிலை - III

பொய்முனாதேவி
மேற்பார்வையாளர் / வரைவளர் நிலை II

உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
நாமக்கல்.